***கவனிக்க.*-  *08.08.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1824 - 2013 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2013.08.16

*1824 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *1094* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1106* |


***கவனிக்க.*-** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சட்டத்தின்கீழ் 2011 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி-மாச்சு) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

B2-B80750

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, புரட்டாதி மாதம் 16 ஆந் திகதியன்றோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆடி 23.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | தலப்பிட்டிய பகுதி காலி மாவட்டப் பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், காலி |

8-462

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, புரட்டாதி மாதம் 16 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆடி 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | இறக்காமம் | சம்மாந்துறை பற்று (10ஏ, 11ஏ கிராம வண்ணமை) பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அம்பாறை |

8-471

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, புரட்டாதி மாதம் 16 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆடி 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | அக்கரைப்பற்று | கருங்கொடித்தீவு பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | பொத்துவில் | பொத்துவில் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அம்பாறை |

8-472

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, புரட்டாதி மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆவணி 01.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | ருவன்வெல்ல | கன்னந்தெட்ட பகுதியில் கோரலதுன மற்றும் பாத்துபுலத்கம பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கேகாலை |

8-630

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - முல்லைத்தீவு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, புரட்டாதி மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆவணி 01.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | ஒட்டுசுட்டான் | கற்சிலைமடுபிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரிவில் விவாகப் (பொது)பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், முல்லைத்தீவு |

8-631

---

## இலங்கை வான்படை

அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் ஆண்/பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :

(அ) விமானத்தள நிர்மாணப் பிரிவு
(ஆ) வைத்தியப் பிரிவு
(இ) பரிபாலன வைத்தியப் பிரிவு
(ஈ) பல் வைத்தியப் பிரிவு
(உ) பரிபாலன நீதிப் பிரிவு

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆண்/பெண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

***(அ) விமானத்தள நிர்மாணப் பிரிவு.- சிவில்/பொறியியல்/ மின்னியல் பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர/ தொண்டர்) :***

***ப்ளையிட் லெப்டினன்ட்** - சிவில்/பொறியியல்/மின்னியல் பொறியியலில் BSc பட்டத்துடன் சான்றிதழ் அல்லது அதற்கு சமமான தகைமைகள் இருத்தல்.

*இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் மூலமாக சிவில்/பொறியியல்/மின்னியல் பொறியியல் தொடர்பாக கற்றுக்கொண்டிருப்பவர்கள் முதலாவது மற்றும் இரண்டாவது பகுதியினை முழுமையாக முடித்து தற்போது மூன்றாவது பகுதியில் பரீட்சைக்கு தோற்றமளித்து இருக்கும் மாணவர்கள் இது தொடர்பாக விண்ணப்பிப்பதுடன் ப்ளயின் ஒபீசர் தரத்தில் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். முழுமையாக பட்டத்தினை முடித்திருப்பவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் மூலமாக சிறந்த முறையில் சித்தி அடைந்தவர்கள் பல்கலைக்கழகத்தின் மூலமாக சான்றிதழ் பெற்ற பின் ப்ளயிட் லெப்டினன்ட் தரத்தில் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

***ப்ளையின் ஒபிசர்** - சிவில்/பொறியியல்/மின்னியல் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்கு சமமான தகைமைகள் இருப்பதுடன் 3 வருட துறை சார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

***ப்ளையிட் ஒபிசர்** - சிவில்/பொறியியல்/மின்னியல் பொறியியலில் NDT/NDES/HNDE அல்லது அதற்கு சமமான தகைமைகள் இருப்பதுடன் 3 வருட துறை சார்ந்த அனுபவம் இல்லாத விண்ணப்பதாரிகள் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

***திரவிய பொறியியல் அதிகாரி (தார் இயந்திரம்) - ஆண் (நிரந்தர/தொண்டர்) :***

***ப்ளையிட் லெப்டினன்ட்** - சிவில்/இயந்திர பொறியியல் BSc பட்டம் அல்லது திரவிய பொறியியல் BSc பட்டம் மற்றும் பெருந்தெருக்கள் விமான ஓடு தள நிருமாணிப்பில் பயன்படும் இயந்திரம் தொடர்பாக மற்றும் செப்பமிடுதல் தொடர்பாக கலவை செய்யும் இயந்திரம் தொடர்பாக குறைந்தபட்சம் (1) வருட அனுபவம் இருத்தல் வேண்டும். பெருந்தெருக்கள் விமான ஓடு தள நிருமாணத்தின் கலவை தயாரிப்பில் உட்படுத்தப்படும் மூலவளங்களை பரிசோதனை செய்யும் ஆற்றல் மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது

திரவிய பொறியியலில் BSc பட்டம் மற்றும் பெருந்தெருக்கள், விமான ஓடு தள நிருமாணிப்பில் பயன்படும் இயந்திரம் தொடர்பாக மற்றும் செப்பமிடுதல் தொடர்பாக கலவை செய்யும் இயந்திரம் தொடர்பாக குறைந்தபட்சம் (2) வருட அனுபவம் இருத்தல் வேண்டும். பெருந்தெருக்கள் விமான ஓடுதள நிருமாணத்தின் கலவை தயாரிப்பில் உட்படுத்தப் படும் மூலவளங்களை பரிசோதனை செய்யும் ஆற்றல் மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும்.

***ப்ளையின் ஒபிசர்** - சிவில் பொறியியல் NDT/NDES/HNDE அல்லது அதற்கு சமமான தகைமைகள் இருப்பதுடன் பெருந்தெருக்கள் விமான ஓடுதள நிருமாணத்தின் கலவை தயாரிப்பில் உட்படுத்தப்படும் மூலவளங்களை பரிசோதனை செய்யும் ஆற்றல் மற்றும் 3 வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

***கட்டடக் கலை பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர/ தொண்டர்) :***

***தற்காலிக ஸ்கொட்ரன் லீடர்** - சிவில்/இயந்திரவியல் பொறியியலில் பட்டம் (கட்டடக் கலை பொறியியலில்) BSc பட்டம் வளி சீராக்கல், நீர் விநியோகம், மருத்துவ வசதி, பொது மக்கள் சுகாதாரம், தீயணைப்பு வசதி, மின்சார விநியோகம் போன்றவற்றில் புதிய தொழில்நுட்பத்தை பிரயோகித்தல் போன்றவற்றில் BSc பட்டத்துடன் பதவி சம்பந்தமாக குறைந்தபட்சம் 2 வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை வான்படையில் தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் (Temporary Squadron Leader) நிலையியல் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

***வாஸ்து நிபுணர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்) :***

****தற்காலிக ஸ்கொட்ரன் லீடர்*** - பெற்றுக்கொண்ட வாஸ்த்து அனுபவம் இருத்தல் வேண்டும்.

****ப்ளையிட் லெப்டினன்ட்*** - MSc Arch பட்டம் அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பெற்ற B/Arch பட்டம் இருத்தல் வேண்டும்.

***நிலஅளவையாளர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்) :***

****ப்ளையிட் லெப்டினன்ட்*** - மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் BSc in (QS) பட்டம் அல்லது இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் (Graduate Member) உறுப்பினராக இருத்தல் குறைந்தபட்சம் (2) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும். அல்லது இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் (Technical Member) உறுப்பினராக இருத்தலாக இருப்பதுடன் பதவி சம்பந்தமாக குறைந்தபட்சம் (3) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

****ப்ளையின் ஒபிசர்*** - இலங்கை நிலஅளவையாளர் அமைப்பில் (Technical Member) ஆக இருப்பதுடன் இரத்மலானை நிலஅளவையாளர் UNIVOTEC அமைப்பில் டிப்ளோமா முடித்திருத்தல் மற்றும் குறைந்தபட்சம் (2) வருட துறைசார்ந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

***அளவையாளர் - ஆண் (நிரந்தர/தொண்டர்) :***

****ப்ளையிட் லெப்டினன்ட்*** - சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பெற்ற அளவையாளர் BSc பட்டம் இருத்தல் வேண்டும். அல்லது தியத்தலாவை அளவு மற்றும் வரைபட நிறுவனத்தின் ISM டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

****ப்ளையின் ஒபிசர்*** - தியத்தலாவை அளவு மற்றும் வரைபட நிறுவனத்தின் ISM டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

***(ஆ) வைத்தியப் பிரிவு.- வைத்திய அதிகாரி - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்) :***

****ப்ளையிட் லெப்டினன்ட்*** - ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற MBBS பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையில் பதிவுசெய்திருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு கட்டளை பாதுகாப்பு சேவை சபையில் அல்லது சபுகஸ்கந்த கல்லூரியில் கடமை புரிதல் வேண்டும்.

***(இ) பரிபாலன வைத்தியப் பிரிவு.- மனோவைத்திய நிபுணர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)***

****ப்ளையிட் லெப்டினன்ட்*** - மனோவைத்தியத்தில் BSc பட்டத்துடன் இலங்கை வைத்திய சபையில் பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

***(ஈ) பல் வைத்தியப் பிரிவு.- பல் அறுவை மருத்துவர் - ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)***

***ப்ளையிட் லெப்டினன்ட்*** - BDS அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் SLMC அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

***பயிற்சிபெறும் (Pre-Intern) வைத்தியர் - ஆண்/பெண் (தொண்டர்) :***

*இலங்கை வைத்திய சபையினால் அனுமதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற BDS (Sri Lanka) அல்லது அதற்குச் சமனான பட்டம், தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் 5 ஆண்டு சேவைக் காலத்திற்குள் ERPM பரீட்சையில் சித்திபெற்று இலங்கை வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இயலாத விண்ணப்பதாரிகள் 5 வருட சேவைக்குப் பின் நிறுத்தப்படுவார்கள்.

*தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ப்ளையின் ஒபிசர் தரத்தில் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப்படுவதோடு ERPM பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை வைத்திய சபையின் நிரந்தர சான்றிதழின் பின் ப்ளயிட் லெப்டினன்ட் தரத்திற்கு கொண்டுவருவது பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

***பல் மருத்துவ மாணவர் - ஆண்/பெண் (நிரந்தர)***

***பைலட் ஒபீசர்*** - BDS 2 ஆவது பகுதியை முடிவுசெய்து 3 ஆம் வருட ஆரம்பத்தில் இருக்கும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

***ப்ளையிங் ஒபீசர்*** - இறுதி BDS முதற்கட்டம் முழுமையான பிறகு இறுதி வருடம் BDS பயிலும் மாணவர் இத்துறைக்கு விண்ணப்பிக்கலாம்.

***குறிப்பு.***- (1) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ப்ளையிட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக தேர்ந்தெடுக்கப்படுவதோடு அவர்கள் அன்றிலிருந்து பத்து வருடங்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

(2) தேர்ந்தெடுக்கப்படும் பல் வைத்திய மாணவர்கள் இறுதி வருடம் முடியும்வரை வான் படையிலிருந்து விடுவிக்கப் படுவார்கள். பல் வைத்திய BDS பட்டத்தினை முடித்த பின்னும் வைத்திய சபையில் பதிவாகியதும் அவர்கள் ப்ளையிட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தரப்படுத்தப் படுவார்கள்.

(3) கல்வித் தொழிட்பாடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

(4) பல் வைத்திய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் வருடத்தைக் காட்டக்கூடிய ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்கவும்.

***(உ) பரிபாலன நீதிப் பிரிவு.- நீதி அதிகாரி- ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)***

இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். வர்த்தக ஆவணங்களைத் தயாரித்தல், ஆவணங்கள் கையாளுதல், நீதிமன்றத்தில் குற்ற விசாரணை, ஒழுக்கத்தை சீராக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை வான் படையில் ஸ்கொட்ரன் லீடர் (Squadron Leader) ப்ளையிட் லெப்டினன்ட் (Flight Lieutenant) துறைசார்ந்த அனுபவம் இருப்பின் அதிகாரியாக சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

3. **வேறு தகைமைகள் :**

(அ) *தேசிய இனம்.-* ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) *குடியியல் நிலை.-* விவாகமானவர்/விவாகமாகாதவர் ;

(இ) *பால்.-* ஆண்/பெண் (தேவையைப் பொருத்து)

(ஈ) *வயது.-* 2013, ஒற்றோபர் 15 ஆந் திகதியன்று :

(1) விமானத்தள நிர்மாணப் பிரிவு, பல் வைத்திய மற்றும் (பயிற்சி பெறும் Pre-Intern வைத்தியர்) போன்ற பிரிவுகளின் விண்ணப்பதாரிகளுக்கு.- 18-35 இற்குக் கூடாதிருத்தல் வேண்டும்.

(2) பரிபாலன வைத்தியப் பிரிவு (மனோவைத்திய நிபுணர்) மற்றும் பல் வைத்திய பிரிவு (பல் வைத்திய மாணவன்) போன்ற பிரிவுகளின் விண்ணப்பதாரிகளுக்கு.- 18-30 இற்குக் கூடாதிருத்தல் வேண்டும்.

(உ) *உயரம்.-* ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்
பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் ;

(ஊ) *நிறை.-* இலங்கை விமானப்படை உடற்பருமன் சுட்டிக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

$$\text{உடற்பருமன் சுட்டி : பிஎம்ஐ} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2\ \text{(மீ)}}$$

(எ) *மார்பு.-* ஆண் 32" (குறைந்தது)

(ஏ) *பார்வை வர்ணப் பதிவு மட்டம் .-* CP2

(ஒ) *தொலைபார்வை.-* இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்திற் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.-** தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/தொண்டர் நிலைகளில் Pilot Officer/Flying Officer/Flight Lieutenant/Squardan Leader தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஆளுநரினால் தீர்மானிக்கப்படும் இடங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி இலங்கை வான்படை அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வு பெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவார். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் அவருக்கு (ஆண்/பெண்) ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (உ) (17) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

| | |
|---|---|
| பைலட் ஒபீசர் | - ரூபா 2,42,700 |
| ப்ளையிங் ஒபீசர் | - ரூபா 2,75,220-34 x 7,740 = ரூபா 5,38,380 |
| ப்ளைற் லெப்டினன்ட் | - ரூபா 3,21,660-28 x 7,740 = ரூபா 5,38,380 |
| ஸ்குவாட்ரன் லீடர் | - ரூபா 3,52,620-24 x 7,740 = ரூபா 5,38,380 |

விங் கமாண்டர் - ரூபா 3,62,100-20 x 9480 = ரூபா 5,51,700

குறூப் கப்ரன்- - ரூபா 4,41,060-18 x 12,600 = ரூபா 6,67,860

(ஆ) வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் (வருடமொன்றுக்கு) :-

ஆரம்பப் பிரிவு - ரூபா 3,13,920-2 x 7,740 = ரூபா 3,29,400
தரம் II - ரூபா 3,37,140-8 x 7,800 = ரூபா 3,99,540
தரம் I - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140
விசேட பிரிவு - ரூபா 5,08,680-12 x 15,720 = ரூபா 6,97,320

(இ) வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் (வருடமொன்றுக்கு) :-

ஆரம்பப் பிரிவு - ரூபா 3,06,180-3 x 7,740 = ரூபா 3,29,400
தரம் II - ரூபா 3,37,140-8 x 7,800 = ரூபா 3,99,540
தரம் I - ரூபா 4,12,140-15 x 12,600 = ரூபா 6,01,140
விசேட பிரிவு - ரூபா 5,08,680-12 x 15,720 = ரூபா 6,97,320

(ஈ) வைத்திய, பல் வைத்திய அதிகாரிகளுக்கான சம்பளம் பின்வருமாறு :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு :

ஆரம்பப் பிரிவு - ரூபா 1,700 (மாதமொன்றுக்கு)
தரம் II - ரூபா 1,700 (மாதமொன்றுக்கு)
தரம் I - ரூபா 3,400 (மாதமொன்றுக்கு)
விசேட பிரிவு - ரூபா 3,400 (மாதமொன்றுக்கு)

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு :

ஆரம்பப் பிரிவு - ரூபா 2,125 (மாதமொன்றுக்கு)
தரம் II - ரூபா 1,700 (மாதமொன்றுக்கு)
தரம் I - ரூபா 400 (மாதமொன்றுக்கு)

(3) மேலதிக வேலைப்படி - ரூபா 25,000 (மாதமொன்றுக்கு)

(4) மேலதிக வேலைப்படி:

ஆரம்பப் பிரிவு - ரூபா 335 (மணித்தியாலத்திற்கு)
தரம் II - ரூபா 383 (மணித்தியாலத்திற்கு)
தரம் I - ரூபா 528 (மணித்தியாலத்திற்கு)
விசேட பிரிவு - ரூபா 628 (மணித்தியாலத்திற்கு)

(5) (15) (ஈ) காணப்படும் சேவைக் கொடுப்பனவுகள் கீழ்க்காணப்படும் முறைக்கமைய வழங்கப்படும்.

(ஈ) **சேவைக் கொடுப்பனவுகள் :**

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 6,600 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,400 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு 1,000) ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255) ;

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 14,449.80 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) அடிப்படைப் படியில் 17.5% சதவீதம் விசேட கொடுப்பனவாக தரப்படும் ;

(12) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும்) ;

(13) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது வசு வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(14) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(15) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(16) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(17) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,600 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

(18) சேவைக் கொடுப்பனவு ரூபா 300, ரூபா 400, ரூபா 500. (வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொருத்து).

(19) மேலதிக கொடுப்பனவு ரூபா 1,500 (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(20) 1/ 20 கொடுப்பனவு, மாதமொன்றுக்கு - அடிப்படைச் சம்பளம் x 1/20 x 3 நாட்கள் மட்டும். (பல் வைத்தியர்களுக்கு மாத்திரம்).

(21) மேலதிக சேவை கொடுப்பனவு 120 மணித்தியாலத்திற்கு (கூடியது) மாதத்திற்கு (வைத்திய, பல் வைத்திய)

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படு மாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர் களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2013, ஓகத்து 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கலை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர்களுக்கான விண்ணப்பம் ..................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பத்தாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் சாரணர் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பத்தாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

* **குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை அதிகாரியின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.-

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதி தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

எச். டி. அபேவிக்ரம,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் .................**
**பிரிவில் அரசாணை அலுவலர் பதவி**

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :--.

8. அஞ்சல் முகவரி :----.

9. இணையத்தள முகவரி :----.

10. பிறந்த திகதி :----.

11. உயரம் :----.

12. மாவட்டம் :----.

13. தேர்தற் தொகுதி :----.

14. கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் இலக்கம் :----.

15. தொலைபேசி இலக்கம் :----.

16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

17. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ சர்வகலாசாலை பெயர்கள் | பரீட்சையின் தன்மை | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு<br>தொழில் தகைமைகள் | | |

18. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

19. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

20. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

21. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

22. புறம்பான சாதனைகள் பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

23. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.

24. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

25. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவ ராயின் அல்லது பிணையில் விடப்பட்டவராயின் விபரங்கள் தருக :----.

26. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

27. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

26. **விண்ணப்பக்காரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத் துகை.**- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :----.

8-552

**கமநல நியாயச் சபைகளை நியமித்தல் - 2013/2016**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

03 வருட காலத்தின் பொருட்டு 25 கமநல நியாயச் சபைகளை நியமித்தல் தொடர்பாக 2011 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் ஆகிய என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

இங்கு கீழக்குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரிகளினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2013, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் எனக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கமநல நியாயச் சபைகள்'' எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கைக்கமைய சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் 70 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. **தொழில் தகைமைகள் :**

(1) 07 வருடத்திற்குக் கூடுதலான அனுபவமுடைய ஓய்வுபெற்ற நீதிபதியொருவராகவிருத்தல் ;

(2) கமநல சேவைகள் துறையில் நிறைவேற்று மட்டத்தில் 07 வருட சேவைக்காலத்தையுடைய ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்.

5. **சேர்த்துக்கொள்ளப்படும் எண்ணிக்கை**.- 25 பேர்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் கால எல்லை**.- 03 வருடங்கள்.

7. (அ) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

8. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை அல்லது எல்லாவற்றையும் வேண்டும்போது சமர்ப்பிப்பதற்கு இயலுமாகயிருத்தல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) சேவைச் சான்றிதழ் ;
(இ) தொழில் தகைமை தொடர்பான சான்றிதழ் ;
(ஈ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி மூலம் சித்தியடைந்துள்ள ஆகக்கூடிய பரீட்சை தொடர்பான சான்றிதழ்கள்.

9. இப்பதவியின் பொருட்டு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எந்தப் பகுதியிலும் கடமையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியானவராகவிருத்தல் வேண்டும்.

10. இப்பதவியின் பொருட்டு மாதாந்தம் ரூபா 28,740 கொடுப்பனவும், ரூபா 5,000 மாதாந்த மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும்.

எம். ஏ. எஸ். வீரசிங்ஹ,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 42, சேர். மார்க்கஸ் பிரனாந்து மாவத்தை,
கொழும்பு 07.
2013, யூலை 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

**கமநல நியாயச் சபையின் பொருட்டு நியமனம்**

1. முழுப்பெயர் :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

3. நிரந்தர வதிவிடம் :----.

4. முகவரி :----.

5. பிறந்த திகதி :

வருடம் :----, மாதம் :----, திகதி :----.

6. வயது :

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

7. இனம் :----.

8. சமயம் :----.

9. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

10. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

11. தொலைபேசி இலக்கம் :----.

12. கல்வித் தகைமைகள் :..........................................................................................................................................

13. சேவை அனுபவங்கள் :..........................................................................................................................................

14. தொழிற் தகைமைகள் :..........................................................................................................................................

15. வாசிக்க, எழுத மற்றும் கதைப்பதற்கு இயன்ற மொழிகள் தொடர்பான விபரங்கள் :
(உரிய கோட்டினுள் ( ✓ ) அடையாளத்தை இடவும்).

| மொழி | வாசித்தல் | | | எழுதுதல் | | | கதைத்தல் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிக நன்று | நன்று | குறைவு | மிக நன்று | நன்று | குறைவு | மிக நன்று | நன்று | குறைவு |
| சிங்களம் | | | | | | | | | |
| தமிழ் | | | | | | | | | |
| ஆங்கிலம் | | | | | | | | | |

16. கமநல அபிவிருத்திச் சட்டம் தொடர்பாக தேர்ச்சிகள் உண்டா ? ஆம்/இல்லை
பெற்றிருப்பின், இத்தேர்ச்சியினைப் பெற்றுக்கொண்ட முறை பற்றிய விபரங்கள் :..........................................................................
..........................................................................................................................................

17. தாங்கள் ஓய்வுபெற்ற நீதிபதியொருவரா ? இல்லையெனில் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரா ? :

| | | |
|---|---|---|
| 01 | நீதிபதியொருவர் | |
| 02 | ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் | |

18. சேவைகள் தொடர்பான தகவல்கள் :

| சேவை | தொழில் தொடர்பான கால எல்லைகள் | | வகித்த பதவிகள் | சேவை நிலையங்கள் |
|---|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

19. சொந்தமான சொத்துக்களின் பெறுமதி : ரூபா :----.

20. தங்களது மாதாந்த வருமானம் : ரூபா :----.

21. கடந்த 10 வருட காலத்தினுள் தாங்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளீரா ? :-----.

22. வருமான வரி செலுத்துபவரா ? :----.

23. தங்களுக்கு எதிராக நீதிமன்றமொன்றில் குற்றம் தொடர்பான வழக்குகள் தொடரப்பட்டுள்ளதா ? :----.

24. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றிருப்பின் அவற்றின் விபரம் :----.

25. தங்களது சுயவிபரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களின் விபரங்கள் : (அவர்கள் தங்களை நன்றாக அறிந்த பொறுப்பு வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்).

(1) பெயர் :----.
முகவரி :----.
தொழில் :----.
தொலைபேசி இலக்கம் :----.
தாங்கள் அறிமுகமான காலப்பகுதி :----.

2. பெயர் :----.
முகவரி :----.
தொழில் :----.
தொலைபேசி இலக்கம் :----.
தாங்கள் அறிமுகமான காலப்பகுதி :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.
**குறிப்பு**.- (சகல சான்றிதழ்களின் பிரதிகளையும் இத்துடன் இணைக்கவும்.)

8-569

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை வளர்ப்புப் பாடசாலை நுழைவிற்கான போட்டிப் பரீட்சை - 2013

***2014/2016 கல்வி ஆண்டின் பொருட்டு கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி***

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஊடாக நடாத்தப் படுகின்ற இரண்டு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறி - 2014/ 2016 ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் 2013, ஒற்றோபர் மாதம் கண்டியில் நடத்தப்படும். அதன் பொருட்டு விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**2. இரண்டு வருட டிப்ளோமா பாடநெறி :**

2.1 இப்பாடநெறி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் நடாத்தப்படும்.

2.2 இந்த டிப்ளோமா பாடநெறியானது ஒரு தொழிற் தகைமையை மாத்திரம் பெற்றுத் தருகின்றது (அரசாங்கத்தில் தொழில் பெற்றுக் கொள்வதற்கு இத்தொழிற் தகைமைக்கு மேலதிகமாக அப்பதவிக்கு உரிய ஆட்சேர்ப்புச் செயன்முறையில் குறிப்பிடப் பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்).

2.3 பயிற்சிக் காலத்தின்போது மாணவர்களுக்கு நாளாந்த கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும். அதேவேளை ஏனைய வற்றிற்கான செலவினை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

2.4 சில வேளைகளில் சனி, ஞாயிறு போன்ற தினங்களிலும் வகுப்புக்கள் நடைபெறுவதால் விடுதிகளில் இருந்து மாணவர்களை அனுப்புவது மாதத்தின் ஒரு வார இறுதியில் மாத்திரமாகும்.

**3. ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள் :**

3.1 (அ) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மூன்றில் கட்டாயமாக திறமைச் சித்தியும், சமூகக் கல்வி அல்லது விவசாயம் அல்லது வரலாறு போன்ற பாடங்கள் மூன்றில் ஒன்றிற்காவது திறமைச் சித்தியுடன் (இதற்கு அமைய நான்கு (4) திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும்.) இரு தடவைக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களுடன் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இங்கு ஒரே தடவையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக்குறைந்தது 5 பாடங்களிலாவது சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு தாவரவியல், இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், கால்நடை விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (இத்தகைமைகளைக் கொண்டுள்ள மாணவர்களுக்கு தெரிவுசெய்கையில் முன்னுரிமை வழங்கப்படும்)

அல்லது

(ஆ) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மூன்றில் கட்டாயமாக திறமைச் சித்தியும், சமூகக் கல்வி அல்லது விவசாயம் அல்லது வரலாறு போன்ற பாடங்கள் மூன்றில் ஒன்றிற்காவது திறமைச் சித்தியுடன் (இதற்கு அமைய நான்கு திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும்) இரு தடவைக்கு மேற்படாத வகையில் ஆறு பாடங்களுடன் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சை சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இங்கு ஒரே தடவையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக்குறைந்தது ஒரே தடவையில் 5 பாடங்களிலாவது சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

மற்றும்

க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு தாவரவியல், இரசாயனவியல், பௌதீக விஞ்ஞானம், கால்நடை விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். இத்தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படுவது 3.1 (அ) இல் விண்ணப்பகாரர் சகலரும் தெரிவுசெய்ததன் பின்னர் வெற்றிடம் இருந்தால் மாத்திரம் ஆகும்.

(இ) ஆங்கில மொழியில் இக்கற்கை நெறியினைத் தொடர விரும்பும் விண்ணப்பகாரர், க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் பொது ஆங்கில பாடத்தில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பக்காரர் 2013.09.16 ஆந் திகதியன்று 17 வயதிற்கு குறையாமலும் 25 வயதினை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும்.

3.3 3.1 மற்றும் 3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகளை கவனமாக வாசிக்குமாறு விண்ணப்பகாரர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்டிராத மற்றும்/அல்லது உரிய வயதெல்லையை மீறும் விண்ணப்பகாரரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.4 பெறுபேற்றினை எதிர்பார்த்து இருக்கும் விண்ணப்பகாரர் விண்ணப்பிக்க வேண்டாம். அரச திணைக்களம் ஒன்றில் அல்லது நிறுவனம் ஒன்றில் இருவருட கால்நடை வளர்ப்பு பாடநெறியினை பின்பற்றும் மாணவர்கள் இப்பாடநெறியை பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்க தகைமையற்றவராவர்.

3.5 சகல விண்ணப்பகாரரும் 5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துமூல வினாப்பத்திரத்திற்கு தோற்ற வேண்டும். அத்துடன் விண்ணப்பகாரர் நுழைவுப் பரீட்சையின்போது தாம் பின்பற்ற விரும்பும் மொழி மூலத்திலேயே அமருதல் வேண்டும்.

3.6 ஆங்கில மொழி மூலம் பயில விரும்பும் விண்ணப்பகாரர் 5.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள வினாப்பத்திரத்திற்கும் அமருதல் வேண்டும்.

**4. விண்ணப்பங்கள் :**

4.1 இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பக்காரரினால் ஏ4 அளவிலான கடதாசியில் விண்ணப்பம் தயாரிக்க வேண்டும். முறையாகப் பூரணத்துவமாகாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

4.2 பரீட்சைக் கட்டணம் ரூபா 150 ஆகும். விண்ணப்பகாரர் தபால் பணிமனையில் இருந்து பெற்றுக்கொண்ட ரூபா 150 பெறுமதியான காசுக் கட்டளையை கால்நடை உற்பத்தி

சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் எனும் பெயருக்கு பெற்றுக்கொண்டு மாற்றக்கூடிய தபால் பணிமனை, பேராதனை எனக் குறிப்பிடப்பட்டு விண்ணப்பத்துடன் உரிய கூட்டில் அதன் ஓரத்தை மாத்திரம் ஒட்டிவிடுதல் வேண்டும். மேலும் காசுக் கட்டளையின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றம் செய்ய முடியாது. இப்பரீட்சையின் பொருட்டு காசுக் கட்டளையை விண்ணப் பத்துடன் அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் அறியத் தராமலேயே நிராகரிக்கப்படும்.

4.3 விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் மாத்திரம் 2013.09.16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி), கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த.பெ. இலக்கம் 13, பேராதனை" எனும் முகவரிக்கு தபாலிடுதல் வேண்டும்.

4.4 விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கால்நடை வளர்ப்பு பாடசாலைக்கான நுழைவு - 2014/2016" எனும் சொற்றொடர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

4.5 விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்பு சான்றிதழ் என்பவற்றின் நிழற்படப் பிரதிகள் இணைக்கப் பட்டு இருக்க வேண்டும். இவ்வாறு வினவப்பட்டிருக்கும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்காதவிடத்து விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சகல சான்றிதழ் களினதும் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

**5. தெரிவுசெய்யும் முறை :**

5.1 இத்திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூல மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

5.2 எழுத்துமூலப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :-

(i) கால்நடை வளர்ப்பு.- க.பொ.த. (சா.த.)ப் பரீட்சையின் விவசாயப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு தொடர்பான பகுதிகளில் இருந்து தயாரிக்கப்படும் பல்தேர்வு மற்றும் சிறு வினாக்களைக் கொண்டு அமைந்து இருக்கும். (நேரம் : 1 மணித்தியாலயம்)

(ii) பொது அறிவு : (நேரம் : 1 மணித்தியாலம்)

5.2.1 ஆங்கில வினாப்பத்திரம் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையின் ஆங்கில பாடத்திற்கான பாடப் பரப்பினைக் கொண்டமைந்து இருக்கும். (நேரம் : 1 மணித்தியாலம்)

5.3 எழுத்துமூலப் பரீட்சைக்கு அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது அவ்விரண்டிற்கும்/ அல்லது தோற்றுவதன் பொருட்டு விண்ணப்பக்காரருக்கு எவ்வித கொடுப்பனவும் அரசினால் வழங்கப்பட மாட்டாது.

5.4 பரீட்சை நடைபெறுகின்றபோது விண்ணப்பக்காரரால் தமது ஆளடையாளத்தை பரீட்சை மேற்பார்வையாளருக்கு உறுதிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை ;

(ii) பரீட்சை தினத்திற்கு மூன்று வருடங்களை விஞ்சிவிடாத காலப்பகுதியினுள் வெளியிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்படும் கடவுச்சீட்டு.

5.5 விண்ணப்பகாரர் எவறாயினும் ஒருவர் போலி தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின் அவரது மாணவத் தன்மையை உடன் நிறுத்துவதற்கும், அவ்வாறே பயிற்சிப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்குள் பயிற்சியைவிட்டு விலகும் மாணவர்கள் தொடர்பில் பயிற்சியின் பொருட்டு அரசினால் அதுவரையில் மேற்கொள்ளப்பட்ட சகல செலவுகளையும் மீள செலுத்துவதற்கும் நீர் கட்டுப்பட்டுள்ளீர். செலவின் அளவை தீர்மானிக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும்.

(டாக்டர்) டபிள்யு. கே. டி. சில்வா,
கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே,
பேராதனை.
2013.08.01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

இலங்கை கால்நடை வளர்ப்புப் பாடசாலை

**கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட**
**டிப்ளோமா பாடநெறி - 2014/2016**

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழி மூலம் :

1. விண்ணப்பக்காரரின் முழுப்பெயர் (தெளிவான எழுத்தில்) :----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் :----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

4. முகவரி :----.

5. பிரதேச செயலாளர் பிரிவு :----.
மாவட்டம் :----.

6. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

7. 2013.09.16 ஆந் திகதியன்று உள்ளவாறான வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

8. தொலைபேசி இலக்கம் :----.

9. விண்ணப்பகாரரது கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

| பாடங்கள் | பெற்ற தரம் | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

| பாடங்கள் | பெற்ற தரம் | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். பிரதிகள் இன்றி வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

10. பணம் செலுத்திய தபால் பணிமனை மற்றும் பற்றுச்சீட்டின் இலக்கம் :----.
(காசுக் கட்டளையை கழறாதவாறு இங்கே ஒட்டவும்.)

| |
|---|
| |

11. இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அல்லது நிறுவனம் :----.

12. பாடசாலையில்/நிறுவனத்தில் இருந்து விலகிய திகதி :----.

13. கால்நடை வளர்ப்பில் ஏதாவது அனுபவம் பெற்று இருப்பின் அது தொடர்பான விபரம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்) :----.

14. கிராம அபிவிருத்தி/ விவசாயம்/ சமூக சேவை/ விளையாட்டு தொடர்பான அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப் படல் வேண்டும்) :----.

15. உறவு முறையல்லாத இருவரது பெயர் முகவரி :

(1) ....................................... (2.) .......................................
....................................... .......................................
....................................... .......................................

எனது அறிவுக்கு எட்டியவரையில் மேலே என்னால் தரப் பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை என்றும், உண்மை யானவை என்றும், எனது வழமையான கையொப்பத்தை இட்டு இத்தால் உறுதிமொழிகின்றேன். எனது தெரிவின் பின்னர் இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழையானது எனக் காணப்படுமிடத்து எனது மாணவர் நிலை முடிவுறுத்தப் படுவதுடன், பயிற்சி பெறும் காலத்தில் எனக்காக அரசாங்கத் திற்கு செலவுகள் ஏதும் ஏற்பட்டு இருப்பின் அத்தொகையை நான் செலுத்த வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பக்காரரது கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

1. .......................................................................................
2. .......................................................................................
3. .......................................................................................

8-626

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.